# சர்வதேச உறவில் முஸ்லிம் - முஸ்லிமல்லாதோருக்கு ஸலாம் கூறுதல்: மத்தியகால இஸ்லாமிய அறிஞர்களுக்கிடையிலான கருத்து நிலை - ஓர் விசேட ஆய்வு

# Conveying Greetings to Muslims and Non Muslims in International Relations – A Special Study on the Level of Opinion among the Islamic Scholors

.A. Aliyar[1], A.L. Masliya[2], M.L.M. Helfan[3] & S.M.M. Nafees[4]

[1&2]Students of Specialization in Islamic Thoughts and Civilization, Dept. of Islamic Studies, FIA, South Eastern University of Sri Lanka
[3]MOH.Office, Padavisripura.
[4]Senior Lecturer, Dept. of Islamic Studies, FIA, South Eastern University of Sri Lanka
aliyarbi8nasanar@gmail.com, fadthum9695@gmail.com, mlhelfan@gmail.com, smmnafees@seu.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்.

இஸ்லாம் மனித வாழ்கைக்குத் தேவையான அனைத்து வழிகாட்டல்களையும் கொண்ட ஓர் மார்க்கம் என்ற வகையில் அது முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதவர்களுடன் முகமன் கூறும் முறைகளைப் பற்றியும் தெளிவான வழிகாட்டலை வழங்கியிருப்பதனைக் காணலாம். முகமன் கூறுவது தொடர்பான அவசியத்தினை அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் பல்வேறு முறைகளில் எடுத்துரைக்கின்றன. இத்தகைய முகமன் (ஸலாம்) கூறுவது தொடர்பாக இமாம்கள் உடன்பட்டாலும், ஒரு சில இமாம்கள் ஸலாம் மற்றும் அதற்குப் பதில் கூறப்படும் விதங்கள் தொடர்பாக கருத்துவேற்றுமைகள் கொண்டுள்ளனர். இது தொடர்பில் இவர்களிடம் தெளிவின்மையும் சரியான புரிதல்களும் காணப்படாதிருப்பதை அறிய முடிகிறது. அத்துடன் முஸ்லிம்களிடத்திலும் இது தொடர்பான தெளிவின்மையும் அதனை கையாளும் முறைகளில் சரியான வழிமுறைகள் பின்பற்றப்படாமையும் அண்மைக் காலமாக அவதானிக்கப்பட்டு வரும் விடயமாகும். எனவே இந்த ஆய்வு இமாம்களுக்கிடையில் முகமன் (ஸலாம் கூறுதல்) தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளை அடையாளம் காணுவதுடன், முஸ்லிம்கள் மத்தியில் சரியான புரிதல்களையும்,தெளிவையும் ஏற்படுத்துவதுடன், முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதவர்களுக்குமிடையிலான உறவுகளைப் பேணுவதற்கான ஓர் வழிகாட்டலை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. பண்புரீதியாக இவ்வாய்வானது ஆய்வுக் குறிக்கோளினை அடைய இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்-குர்ஆன், அல்-ஹதீஸ், மத்திய கால இமாம்களுடைய நூல்கள், முஸ்லிம் சிந்தனையாளர்களின் எழுத்துக்கள் என்பன மீளாய்வுக்குட்படுத்தப்படுகின்றன. முஸ்லிம்கள் மத்தியில் முகமன் (ஸலாம்) கூறுவது தொடர்பான அவசியத்தினை உணர்த்துவதோ

டு முஸ்லிமல்லாதவர்கள் முகமன் கூறினால் பதில் கூறலாம் என்பதுடன் அவர்களிடமும் முகமன் கூறுவதற்கு ஆரம்பிப்பதுடன் சிறந்த உறவு முறைகளைப் பேணிக் கொள்வதற்கும் ஓர் வழிமுறையாக அமைய இவ்வாய்வு துணை செய்யும் என்பது அதன் எதிர்பார்க்கப்படும் விளைவுகளாகும்.

**பிரதான சொற்கள்:** சர்வதேச உறவு, முஸ்லிம் - முஸ்லிமல்லாதோர், முகமன் (ஸலாம்), மத்தியகால அறிஞர்கள்.

## ஆய்வு அறிமுகம் ( Introduction )

இஸ்லாமிய வாழ்வியல் நெறியானது மனிதனுக்கு தேவையான அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் வழிகாட்டுகின்றது. இவ்வுலகில் மனிதர்கள் அனைவரையும் இறைவன் பல பிரிவினராகவும், பல்வேறுபட்ட பகுதிகளில் வாழும் நிலைகளையும் ஏற்படுத்தியுள்ளான். இதற்கான காரணம் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கும், அறிமுகமாகிக் கொள்வதற்கும், உறவினை ஏற்படுத்திக் கொள்வதற்குமாகும். அல்-குர்ஆன் குறிப்பிடும் போது, ''மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காகவே கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். ஆகவே உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர் தாம் ஏக இறைவனிடத்தில் நிச்சயமாக மிக்க மேலானவர்''[108]இங்கு அறிமுகமாதல் (التَّعارف) என்பதை இஸ்லாம் முகமன் ஊடாக ஏற்படுத்துகின்றது.

இஸ்லாம் ''ஸலாம்'' என்ற முகமன் கூறுவதை முஸ்லிம்களுக்கு வலியுருத்தப்பட்ட ஒன்றாக அடையாளப்படுத்துகின்றது. ஒருவர் மற்றொருவரைக் காணும்போது ஸலாம் சொல்ல வேண்டும். ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது பல்வேறு முறைகள் மூலம் முகமன் கூறுகின்றனர். இதற்காக பல்வேறு வார்த்தைகளையும் பயன்படுத்துகின்றார்கள். ஆனால் இஸ்லாம் கற்றுத் தரும் முகமன் மனிதனின் சுயமரியாதைக்கு பங்கம் ஏற்படாதவகையிலும், சம நிலையில் அன்பு செலுத்துவதற்கும் ஏற்றவகையிலும் அமைந்துள்ளது என்பதையும், முகமன் (ஸலாம்) கூறும் ஒழுங்குகளையும் குறிப்பிடுகின்றது. இதன் வார்த்தை விளக்கமானது சிறந்ததொரு பிரார்த்தனையாக அமைந்திருக்கின்றது. உங்கள் மீது சாந்தியும், சமாதானமும் நிலவட்டுமாக என்று ஒருவர் கூறுகின்றாரேயானால், அவர் பிரார்த்தனை மட்டும் புரியவில்லை, மாறாக, ஏற்படும் துன்பங்கள், துயரங்களிலிருந்தும், பாதுகாப்புப் பெறுகின்றீர்கள் என்பதையும் மொழிகிறார் என்பதாகும். ''ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம், 'இஸ்லாமி(யப் பண்புகளி)ல் மிகவும் சிறந்தது எது?' என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், '(பசித்தவருக்கு) உணவளிப்பதும், உமக்கு அறிமுகமானவருக்கும் உமக்கு அறிமுகமற்றவருக்கும் ஸலாம் சொல்வதுமாகும்' என்று பதிலளித்தார்கள்''[109]

ஸலாம் என்பது ஓர் அறபுச் சொல்லாகும். அஸ்-ஸலாம் என்ற சொல்லானது, இறைவனது திருப்பெயர்களில் ஒன்றாகவும் உள்ளது. இங்கு அந்த அஸ்ஸலாம் என்ற சொல்லினுடைய அர்த்தம் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி அல்குர்ஆனும், அஸ்ஸுன்னாவும் அதிகமாகப் பேசுகின்றன.

---

108 அல்குர்ஆன் 49:13
109 ஸஹீஹுல் புகாரி 6236.

இஸ்லாம் அரபு உலகில் வளர்ச்சி பெறுவதற்கு முன்பு அங்கு வாழ்ந்த அரபிகள் ஒருவர் மற்றவருக்கு முகமன் (ஸலாம்) கூறும் போது, ஹய்யாக்கல்லாஹ் (حياك الله) - இறைவன் உங்களுக்கு ஆயுளை நீட்டித்தருள்வானாக என்று கூறுவார்கள். ஆனால் இஸ்லாம் அதனை விட வித்தியாசமான முறையில், அஸ்ஸலாமு அலைக்கும் (السلام عليكم) என்ற வார்த்தையை முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுத்தது.

முஸ்லிமுக்கு மட்டும் தான் முகமன் (ஸலாம்) கூற வேண்டும் என்றால் முஸ்லிம் என உனக்குத் தெரிந்தவருக்கு ஸலாம் கூறு என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருப்பார்கள். அவ்வாறு கூறாமல் தெரிந்தவருக்கும், தெரியாதவருக்கும் ஸலாம் கூறு என பொதுவாகக் கூறியுள்ளார்கள்.

இந்த ஆய்வானது சர்வதேச உறவுகளைப் பேணுவதில் முகமன் (ஸலாம்) கூறுவதில் மத்தியகால அறிஞர்களின் கருத்து முரண்பாடுகளை அணுகுவதற்கான வழிமுறைகளையும் முஸ்லிம்கள் இவை தொடர்பான சரியான தெளிவினையும் பெற்றுக் கொள்வதுடன் முஸ்லிமல்லாதவர்களுடன் சக உறவினைப் பேணுவதற்கான வழிகளையும் முன்வைக்கும் ஒன்றாக அமைகிறது.

## ஆய்வுப் பிரச்சினை (Research problem)

சமகால இலங்கையில் பல்லின சமூகத்தவர்களுக்கு மத்தியில் முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதனால் முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதோரை சந்திப்பதும், நட்புறவு கொள்வதும் தவிர்க்கமுடியாத ஒன்றாக உள்ளது. இதன்போது முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதோரை சந்திக்கும் போது பல்வேறு விதமான வார்த்தைப் பிரயோகங்கள் கூறுவதற்கு தயக்கம் காட்டுவதுடன் முஸ்லிமல்லாதவர்கள் முகமன் (ஸலாம்) கூறினால் பதில் கூறுவது தொடர்பாக இக்கட்டான நிலமைகளுக்கு தள்ளப்படுகின்றார்கள். இதன் மூலம் முஸ்லிம்களுக்கு ஸலாம் தொடர்பான ஓர் சரியான தெளிவின்மை காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

## ஆய்வின் நோக்கங்கள்.

- முகமன் (ஸலாம் கூறுதல்) தொடர்பான ஓர் சரியான புரிதல்களையும், கருத்து முரண்பாடுகளையும் முஸ்லிம்கள் மத்தியில் தெளிவுபடுத்தல்.
- மத்திய கால இமாம்களான இப்னுல் கையிம், இப்னு ஹஜர், ஷாபி, அபூ மூஸா அல்அஷ்அரி, மற்றும் நவவி ஆகியவர்கள் முகமன் (ஸலாம் கூறுதல்) தொடர்பாக கொண்டுள்ள கருத்து முரண்பாடுகளை அடையாளம் காணுதல்.

## ஆய்வு முறையியல். (Methodology)

ஆய்வு முறையியலாக விளக்க மற்றும் விபரண முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் முதலாம் நிலைத் தரவுகளாக அவதானிப்பு முறைகளும். இரண்டாம் நிலைத் தரவுகளான அல்-குர்ஆன், அல்-ஹதீஸ், மத்திய கால இமாம்களுடைய தொகுப்புக்கள், தற்கால முஸ்லிம் சிந்தனையாளர்களின் ஆக்கங்கள், ஆய்வுகள், நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி திரட்டப்பட்ட தகவல்கள் பண்புசார் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன் விமர்சன ரீதியிலமைந்த ஒன்றாகவும் காணப்படுகின்றது.

## இலக்கிய மீளாய்வு. (Literature Review)

Nesia Andriana என்பவர். ஸலாத்தைப் அனைத்து மனிதர்களுக்கு மத்தியில் பரப்பும் முறைகளை விபரிக்கும் போது, இஸ்லாம் அமைதியையும் சமாதானத்தையும் போதிக்கும் மார்க்கமாகும் இதற்கு எடுத்துக்காட்டாகவே ஹுதைபிய்யா உடன்படிக்கை அமைகிறது என்கிறார். அமைதியையும் சாந்தியையும் பரப்புவதற்காக பன்முக கலாச்சாரத்தில் வாழும் முஸ்லிம்கள் முஸ்லிம்கள் அல்லாதவர்களிடம் சலாத்தினைப் பரப்பலாம். அத்துடன் முஸ்லிம்கள் ஸலாத்தின் மதிப்பை உணர்ந்து அதனை அபிவிருத்தி செய்வதில் அக்கறை கொள்ள வேண்டும். இஸ்லாம் ஒரு அமைதியான மார்க்கம் என்பதை பன்முக கலாச்சாரங்களுக்கு மத்தியில் உணர்த்த வேண்டும் என்பதனை தனது முடிவில் குறிப்பிடுகின்றார்.

Khurshid Imam என்பவர், முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதவர்களுக்கு ஸலாம் கூறலாம் என்பதனை விபரிக்கும் போது, தனது ஆய்வுக் கட்டுரையின் ஆரம்பப் பகுதியில் ஸலாம் என்று சொல்வது அஸ்ஸலாமு அலைக்க," அதாவது சர்வவல்லமையுள்ள கடவுளின் அமைதி உங்கள் மீது இருக்கட்டும். முஸ்லிம்கள் அனைவரும் ஸலாம் கூறுவதை அல்லாஹ்வும், ரஸுலும் கட்டாயமாக்கியுள்ளனர் என்று குறிப்பிடுகின்றார். அத்துடன் அனைவருக்கும் ஸலாம் சொல்ல இஸ்லாம் அனுமதிக்காது என்ற தவறான கருத்து சில முஸ்லிம்களுக்கு உள்ளது இவை தெளிவுபடுத்தப்படுகின்றது என்கிறார். முஸ்லிமல்லாதவர்களுக்கு சலாம் என்று சொல்லலாம் அல்லது வஅலைக்குமுஸ் ஸலாம் என்று பதிலளிக்கலாம் என்று தனது முடிவில் வாதிக்கின்றார்.

Maha Tahir Eesa என்பவர், இஸ்லாம் ஸலாத்துக்கு ஒரு முக்கியத்துவத்தை அளித்துள்ளது என தனது ஆய்வுக் கட்டுரையில் விளக்குகின்றார். இது மத பரிமாணங்களுக்கும் மற்றும் சமூக பரிமாணங்களும் பங்களிப்புச் செய்கின்றது என குறிப்பிடுகின்றார். அத்துடன் வெவ்வேறு சமயங்களில் முகமன் கூறுதல் வேறுபட்டாலும் இஸ்லாத்தின் முகமன் கூறும் முறையானது தனித்துவமான ஒன்றாகவே காணப்படுகின்றது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் முஸ்லிம் சமூகத்தில் வாழ்த்துக் கூறுவதும் மற்றும் முகமன் கூறுவதும் அல்குர்ஆன் சுன்னா கூறாத

ஒரு முறையை கடைபிடிக்கின்றனர். ஆனால் இஸ்லாத்தின் முகமன் கூறும் முறையானது மனிதர்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்துள்ளதுடன் அவை சிறந்த பழக்க வழக்கங்களில் ஒன்றாகவும் அமையும் என தனது முடிவில் குறிப்பிடுகின்றார்.

Nurideen Lemu An-Nigeri என்பவர் ஸலாம் தொடர்பான பிக்ஹ் கலை இமாம்கள் மற்றும் அறிஞர்கள் கொண்டுள்ள பிழையான கண்ணோட்டத்தினை விபரிக்கின்றது. யூதர்கள், கிறிஸ்தவர்கள், பாகன்கள், ஜோராஸ்ட்ரியர்கள் மற்றும் பிறர் போன்ற முஸ்லிமல்லாதவர்களுடன் ஸலாம் செலுத்துவது சட்டவிரோதமானது என்று அவர்கள் தீர்ப்பளித்தனர். இவை தொடர்பான தெளிவான விடயங்களை முஸ்லிம்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார்.

## கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்.

### முஸ்லிம்கள் - முஸ்லிம்களுக்கு ஸலாம் கூறுதல்.

ஸலாம் எனும் முகமனுக்கு பதில் அளிப்பது சொல் சார்ந்த இறை நம்பிக்கையாக அமைந்துள்ளது. இந்தவகையில், ஸலாம் கூறுவதோ, அதற்குப் பதில் கூறுவதோ முஸ்லிம்களுக்கு வலியுருத்திக் கூறப்பட்டதாகும். ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது ஸலாம் கூறுவது சொர்க்கத்தை நோக்கி கொண்டு சேர்க்கும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

‘‘நீங்கள் நம்பிக்கை கொள்ளும் வரை சொர்க்கத்தில் நுழையமுடியாது. ஒருவரை ஒருவர் நேசிக்காமல் நம்பிக்கை கொண்டவர்களாக முடியாது. ஒரு செயலைச் செய்தால் நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிப்பீர்கள். அச்செயலை நான் உங்களுக்குக் கூறட்டுமா?“ என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டு விட்டு “உங்களிடையே ஸலாமைப் பரப்புங்கள்’’ என்றார்கள்’’[110]

ஸலாம் எனும் முகமன் கூறுவது நபிவழி. அதற்கு பதில் வாழ்த்து கூறுவது கடமை. ‘ஒரு முஸ்லிம் மற்றவருக்கு செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. ஸலாம் குறித்து திருக்குர்ஆன் (4:86) இவ்வாறு குறிப்பிடுகின்றது: ‘‘உங்களுக்கு முகமன் கூறப்படும்பொழுது, அதற்குப் பிரதியாக அதைவிட அழகான (வார்த்தைகளைக் கொண்டு) முகமன் கூறுங்கள் அல்லது அதையே திருப்பிக் கூறுங்கள்’’[111].

ஸலாம் என்ற வார்த்தையானது முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. இத்தகைய அற்புதமான வாழ்த்துக்களை எப்போது வேண்டுமானாலும் கூறலாம். எவ்வாறு வேண்டுமானாலும் கூறலாம். ஸலாம் என்று கூறலாம். ஸலாமுன் அலைக்கும், அஸ்ஸலாமு

110 இமாம் புகாரி ஸஹீஹ் அல் புகாரி
111 அல்குர்ஆன் (4:86)

அலைக்கும் என்றும் கூறலாம். நபி (ஸல்) அவர்கள் 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்பதைத் தான் அதிகமான சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார்கள்.

ஸலாத்திற்கு ஒருவர் பதில் கூறுதலானது தனிநபர் மீதும் ஒரு சமூகத்தார் மீதும் கடமையாக்கப்பட்ட ஒன்றாகவுள்ளது. அதைக் கூறத்தவறின் குற்றவாளியாக கருதப்படுவார்கள். ''ஸலாத்திற்கு பதில் கூறுவது இஜ்மாவின் பிரகாரம் பர்ள் (கடமை) ஆகும். ஸலாம் கூறப்படுவது தனிநபர் மீதாக அமைந்தால் அதற்கு பதில் கூறுவது தனிநபர் கடமையாக (பர்ழு ஐன்) மாறும். குழுவினர் மீது ஸலாம் கூறப்பட்டால் அதற்கு பதில் கூறுதல் சமூகக் கடமையாக மாறும். (பர்ளு கிபாயா) சமூகத்தில் ஸலாம் கூறப்பட்டு அதில் ஒருவராவது பதில் கூறவில்லை என்றால் அனைவரும் குற்றவாளியாக கருதப்படுவார்கள்''[112] பெரும்பான்மையான மார்க்கத் தீர்ப்பு அறிஞர்கள் ஸலாதுக்குப் பதில் கூறுதல் வாஜிப் என்று குறிப்பிடுகின்றார்கள். ஸலாம் கூறுதல் வாஜிபா ஸுன்னத்தா என்பது தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர். பெரும்பான்மையான இமாம்கள் ஸலாம் ஆரம்பித்தல் ஸுன்னத் என்று குறிப்பிட்டாலும், ஹனபீ மற்றும் மாலிக் மத்ஹபின் சில இமாம்கள் ஸலாம் கூறுவது வாஜிப் என்கிறார்கள்.

## முஸ்லிம்கள் - முஸ்லிமல்லாதவர்களுக்கு ஸலாம் கூறுதல்.

முஸ்லிம்களுக்கு மட்டுமே முகமன் (ஸலாம்) கூறவேண்டும் என்று பெரும்பாலான முஸ்லிம்கள் தவறாக கருதுகின்றனர். இதன் காரணமாக முஸ்லிமல்லாத மக்களைச் சந்திக்கும் போது முகமன் (ஸலாம்) கூறத் தயங்கி சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிக்கும் சொற்களைக் கூறும் நிலைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அல்லாஹ்வும், அவனது தூதர் நபி (ஸல்) அவர்களும் முகமன் (ஸலாம்) கூறக் கூடாது என்று கட்டளையிடவில்லை. மாறாக முஸ்லிமல்லாதவர்களுக்கு முகமன் (ஸலாம்) கூறுவதைத் தெளிவாக அனுமதித்துள்ளனர். இக்கருத்தில் சில இமாம்கள் முரண்பட்டுக் கொள்கின்றனர்.

முஸ்லிம் அல்லாத ஒருவர் முஸ்லிமுக்கு ஸலாம் கூறினால் கட்டாயம் பதில் கூற வேண்டும். ''வேதத்தையுடையவர்கள் உங்களுக்கு முகமன் (ஸலாம்) கூறினால் அவர்களுக்கு நீங்கள் வஅலைக்கும் என்று கூறுங்கள். யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் நீங்கள் முகமன் (ஸலாம்) கொண்டு ஆரம்பிக்க வேண்டாம். அவர்கள் ஆரம்பித்தால் நீங்கள் பதில் கூற வேண்டும். இந்த ஹதீஸினூடாக முஸ்லிம் அல்லாதவர்களுக்கு கட்டாயம் பதிலளிக்க வேண்டும்.[113] இதன் பிரகாரம் முஸ்லிமல்லாத ஒருவர் முகமன் (ஸலாம்) கூறினால் பதில் கூறவது கட்டாயமாகக் (வாஜிப்) கொள்ளப்படுகின்றது.

காபிரான மனிதர் ஒருவர் முஸ்லிமுக்கு அஸ்ஸாமு அலைக்கும் (السام عليكم ) உங்கள் மீது மரணம் உண்டாகட்டும்! என்றோ, அல்லது கூறிய ஸலாத்தில் சந்தேகம் கொண்டாலோ அவருக்குரிய பதிலாக வஅலைக்கும் (وعليكم ) என்று கூற வேண்டும். அதே நேரம் ஸலாத்தை தெளிவாக அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினால் அவர்களுக்கு பதில்

[112] இமாம் நவவீ, மஜ்மூ
[113] இமாம் இப்னு பாஸ்

வஅலைக்க ஸலாம் ( وعليك السلام ) என்று கூறலாம். ஆனால் முழுமையாக கூற முடியாது (இப்னு கய்யிம் 1997).

இப்னு ஹஜர், இமாம் ஷாபி மத்ஹப் சார் இமாம்களைத் தொட்டு தனது பத்ஹுல் பாரியில் குறிப்பிடும் போது, முஸ்லிமல்லாதவர் முஸ்லிமுக்கு ஸலாம் கூறினால் பதில் கூறலாம். ஆனால் ரஹ்மதுல்லாஹ் (رحمة الله ) எனக் கூற முடியாது. முஸ்லிமல்லாதவர்களுக்கு முழுமையாக முகமன் (ஸலாம்) கூற முடியாது மாறாக ''அஸ்ஸலாமு அலைக்க என்று ஒருமையாகத்தான் ''உன் மீது ஸலாம் உண்டாகட்டும். என்று கூறலாம். ஆனால் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு (ورحمة الله وبركاته ) என்று கூற முடியாது. ''அபூ உமைமா முஸ்லிமல்லாத யாரைக் கண்டாலும் ஸலாமுன் அலைக்கும் என்று மட்டுமே தான் கூறுவார்கள். இதில் வரஹ்மதுல்லாஹ்வை அவர்கள் கூறுவதில்லை. அதே போன்று முஸ்லிமல்லாதவர்களுக்கு ரஹ்மத் கொண்டு துஆ செய்ய முடியாது. யூதர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து வேண்டுமென்றே தும்முவார்கள் அதற்கு நபி (ஸல்) அவர்கள் யஹ்தீகுமுல்லாஹ் வயுஸ்லிஹ் பாலகும் (يهديكم الله ويصلح بالكم ) என்று தான் கூறுவார்கள்''.[114]

முஸ்லிம் அல்லாதவர்களுக்கு முகமன் (ஸலாம்) கூறுதல் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். ''ஹர்பி (முஸ்லிம்களுடன் பகைமை உணர்வு கொண்டு, யுத்தம் செய்யத் தயார் நிலையில் இருக்கும் முஸ்லிம் அல்லாதவர்) தவிர்ந்த முஸ்லிமல்லாதவருக்கு நாம் முகமன் (ஸலாம்) கூறலாம் எனக்கூறி இதற்கு பின்வரும் சம்பவத்தை ஆதாரமாகக் குறிப்பிடுகின்றார். சுப்யான் இப்னு உயைனா என்பவரிடம் ஒருவர் முஸ்லிமல்லாத ஒருவருக்கு ஸலாம் கூறலாமா? என்று வினவினார் அதற்கு ஆம்! என்று கூறி விட்டு அல்குர்ஆன் வசனத்தினை ஆதாரம் காட்டினார்.

மார்க்க (விடய)த்தில் உங்களிடம் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செய்வதையும் அல்லாஹ் விலக்கவில்லை - நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்பவர்களை நேசிக்கிறான்''[115]

''இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் பாதையில் செல்லும் போது அனைவருக்கும் ஸலாம் கூறுவார்கள். அப்பொழுது அல்கமா (ரழி) அவர்கள் கேட்டார்கள். ''நீங்கள் அனைவருக்கும் ஸலாம் கூறுவது வெறுக்கப்பட்ட விடயம் தானே'' எனக் கேட்டதற்கு இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் ''ஆம் நண்பனாக இருந்தால் நாங்கள் ஸலாம் கூறத்தானே வேண்டும்''[116] என பதில் கொடுத்தார்கள். ''நான் அலி இப்னு அப்துல்லாஹ்வுடன் இருந்தேன் அந்நேரம் ஓர் கிறிஸ்தவர் உணவு கொண்டு வந்தார். அதற்கு அவர் அவரை கண்டவுடன்

[114] இமாம் பைஹகி ஷுஅபுல் ஈமான், அஹ்மத்-19586, திர்மிதி-2739, அபூதாஊத்-5038
[115] இமாம் குர்துபி, தப்ஸீருல் குர்துபி
[116] இமாம் தபரீ

ஸலாம் கூறினார். அதற்கு ஷுஐப் (ரழி) கிறிஸ்தவருக்கு ஸலாம் கூறுகின்றீரே என்று கேற்க அதற்கு அவர்கள் ''என் இறைவா நிச்சயமாக இவர்கள் நம்பிக்கை கொள்ளாத சமூகத்தாராக இருக்கிறார்கள். ஆகவே, நீர் அவர்களைப் புறக்கணித்து (உங்களுக்கு) சாந்தி என்று கூறிவிடும். பின்னர் அவர்கள் (இதன் உண்மையை) அறிந்து கொள்வார்கள்'' என்ற வசனங்களை ஓதிக்காட்டினார்கள்.[117]

"அபூமூஸா அல்-அஷ்அரி அவர்கள் ஒர் கிறிஸ்தவ பாதிரியாருக்கு கடிதம் ஒன்றை எழுதும் முன்னர் ஸலாத்தைக் கொண்டு ஆரம்பித்தார்கள். ''பாதிரியாருக்கு ஸலாம் கூறுகின்றீரே? எனக் கேட்கப்பட்டதற்கு அவர், ''ஒரு கடித்தில் ஸலாம் கூறி இருந்தார். எனவே, நான் இப்போழுது அவருக்கு பதில் கூறுகின்றேன்'' (முஹம்மது நாசிருத்தீன் அல்பானி 1995) என பதில் அளித்தார்கள்.

ஸலப், கலப் (السلف والخلف) இருவரும் இவ்விடயத்தில் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். அதிகமானவர்கள் ஸலாத்தை முஸ்லிம்கள் ஆரம்பிக்கக் கூடாது என்று குறிப்பிடுகின்றார்கள். எனினும் முஸ்லிம்கள் முதலில் ஸலாத்தை கொண்டு ஆரம்பிக்கலாம் என்று இப்னு அப்பாஸ், அபூ உமாமா போன்றோர் உடன்படுகின்றார்கள். ஸலபுகளுடைய கருத்தின் பிரகாரம் அதிகமானவர்கள் ஸலாத்தைக் கூறலாம் என்று குறிப்பிட்டாலும் சில ஸலாம் சொல்லத்தடை செய்யப்பட்ட ஹதீஸ்களை ஆதாரங்காட்டி இதனை நிராகரிக்கின்றார்கள். அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்ற 'யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் நீங்கள் முதலில் ஸலாத்தைக் கொண்டு ஆரம்பிக்காதீர்கள். அவர்களைப் பாதையின் ஓரத்தில் நெருக்கடிக்குள்ளாக்குங்கள்' என்ற ஹதீஸை ஆதாரம் காட்டுகின்றார்கள். (இப்னு கய்யிம் 1997).

இந்த ஹதீஸ் தொடர்பாக பல பலவீனங்கள் காணப்படுவதாக பல அறிஞர்கள் தமது ஆய்வுகள் மூலம் குறிப்பிட்டுள்ளார்கள். அதில் 03 வகையான பலவீனங்கள் அறிவிப்பாளரான சுஹைல் என்பவரிடம் காணப்படுகின்றன.

1. மனன சக்தி குறைபாடு
2. தபர்ருதாக (التفرد) காணப்படுகின்றமை.
3. ஒரே நேரத்தில் முஷ்ரிக், அஹ்லுல் கிதாப், யூதர் என்று மூன்று வகையினராக மாறி மாறி சொற்பிரயோகம் வந்துள்ளது. எனவே, இது தொடர்பான நம்பகத்தன்மை குறைவாக காணப்படுகின்றது.

அதே போல் நபி (ஸல்) அவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலையில் (الخاص) கூறிய ஹதீஸ்களை ஆதாரங்காட்டி முஸ்லிம் அல்லாதவர்களுக்கு முகமன் (ஸலாம்) கூற முடியாது என

117 இப்னு அபீ ஷைபா, அப்துல் வஹாப் அஸ்ஸகபீ

கருத்துரைக்கின்றார்கள். ''நாளைய தினம் யூதர்களை சந்திக்கப் போக இருப்பதனால் நீங்கள் யாரும் அவர்களுக்கு ஸலாம் கூறி ஆரம்பிக்காதீர்கள். அவர்கள் உங்களுக்கு ஸலாம் கூறினால். வஅலைக்கும் என்பதை மட்டும் கூறுங்கள். ஏனென்றால் ஸலாம் கூறினால் பாதுகாப்பு அளித்ததாக மாறிவிடும்.'' [118]

இந்த ஹதீஸ் கூறப்பட்ட பின்னணியானது மதீனாவில் யூதர்களான பனூ குரைழா கோத்திரத்தினர் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக யுத்தம் செய்ய ஆயத்தமான சூழ்நிலையிலாகும். இவர்கள் மதீனாவில் பெரும் குழப்பங்களை தோற்றிவித்ததுடன் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராகவும், முஸ்லிம்களுக்கு எதிராகவும் யுத்தம் செய்ய தயாராக இருந்த நிலையில் இவர்களுக்காக கூறப்பட்ட ஹதீஸாக இது அமைந்துள்ளது. இதனை ஆதாரம் காட்டி முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஸலாம் கூறக் கூடாது என்பதைக் கருதிவிட முடியாது.

இது தொடர்பாக பிக்ஹ் துறை அறிஞர்களும் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டுள்ளனர். ஸலாத்தினை முஸ்லிம்கள் ஆரம்பிக்கலாமா? என்பது குறித்து பிக்ஹ் துறை அறிஞர்கள் பின்வரும் காரணங்களை முன்வைக்கின்றனர்.

01. திம்மிகளின் மீது ஸலாம் கூறுவது மக்ரூ.
02. ஸலாம் என்பது ஒரு காணிக்கை.
03. ஸலாம் என்பது கண்ணியப்படுத்தலின் ஒரு வகை. இதற்கு அல்குர்ஆனில் சூறதுல் முஜாதலாவில் குறிப்பிடப்படுகிறது. ''அல்லாஹ்வோடும் அவனது தூதரோடும் பகைமை கொள்ளக்கூடியவரை முஸ்லிம்கள் விரும்பமாட்டார்கள்''. என்பதனை ஆதாரங்காட்டுகின்றனர்.
04. காபிர்கள் நேசிக்கக்கூடிய எந்தவொரு விடயத்தையும் செய்தல் கூடாது.

இதற்கான மறுப்புக் கருத்தாக:
ஓர் முஸ்லிமைப் பொறுத்தவரை முகமன் (ஸலாம்) என்பது எல்லா சமூகத்தவர்களுடன் பழகுவதற்கான காணிக்கை. இதற்கும் கண்ணியத்திற்கும் எந்த தொடர்பும் கிடையாது. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் யூதர்களுக்கு முகமன் (ஸலாம்) கூறியுள்ளார்கள். இந்த காணிக்கை முஸ்லிம்களுக்கு மாத்திரம் பொருத்தமானதாக அமைவதில்லை. உதாரணமாக: சூறா ஹுஜ்ராத்தின் ஆயத்தில் குறிப்பிடுவது போன்று எல்லா மனிதர்களையும் உள்ளடக்கியதாகவே இது காணப்படுகின்றது. இதில் முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் இருக்கலாம். இதனுடன் ஒப்பிடும் போது பிஹ்க் துறை அறிஞர்கள் இதற்கு மாற்றமான கருத்தினை வேண்டி நிற்பதைக் காணலாம். அத்துடன் முகமன் (ஸலாம்) என்பதை கண்ணியமாகப் பார்க்க முடியாது. இது முகமன் (ஸலாம்) கூறுபவர் கண்ணியப்படுத்தப்படுகின்றாரே தவிர பதில் கூறுவர் அல்ல. முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஸலாம் கூறமுடியாது என்பதை அல்லாஹ்வும், அவனது தூதர்

[118] இமாம் நஸாஇ, அஸ்ஸுனனுல் குப்ரா-10148

நபி(ஸல்) அவர்களும் கட்டளையிடவில்லை. மாறாக முஸ்லிமல்லாதவர்களுக்கு முகமன் (ஸலாம்) கூறுவதைத் தெளிவாக அனுமதித்துள்ளனர். திருக்குர்ஆனில் பல்வேறு வசனங்களில் இப்ராஹீம் நபியவர்களின் வழிமுறையை முஸ்லிம்களும் பின்பற்ற வேண்டும் என்று அல்லாஹ் வலியுறுத்துகின்றான். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத தமது தந்தைக்காக இப்றாஹீம் நபியவர்கள் ஒரு தடவை பாவமன்னிப்புத் தேடினார்கள். அது தவறு என்று தெரிந்ததும் அதிலிருந்து விலகிக் கொண்டார்கள். அவர்கள் தமது தந்தைக்கு பாவமன்னிப்பு கோரிய அந்த விடயத்தைத் தவிர அவர்களின் மற்ற அனைத்து நடவடிக்கைகளிலும் முஸ்லிம்களுக்கு முன்மாதிரி உள்ளது என்று அல்லாஹ் கூறுகிறான். ‘‘உங்களை விட்டும், அல்லாஹ்வையன்றி எதனை வணங்குகிறீர்களோ அதை விட்டும் நாங்கள் விலகியவர்கள். உங்களை மறுக்கிறோம். அல்லாஹ்வை மட்டும் நீங்கள் நம்பிக்கைகொள்ளும்வரை எங்களுக்கும், உங்களுக்குமிடையே பகைமையும் வெறுப்பும் என்றென்றும் ஏற்பட்டு விட்டது’’ என்று கூறிய விடயத்தில் இப்ராஹீமிடமும் அவருடன் இருந்தோரிடமும் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது. “உங்களுக்காக பாவ மன்னிப்புத் தேடுவேன். அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு எதையும் செய்ய நான் அதிகாரம் பெற்றிருக்கவில்லை’’ என்று இப்ராஹீம் தம் தந்தையிடம் கூறியதைத் தவிர. (இதில் அவரிடம் முன் மாதிரி இல்லை) எங்கள் இறைவா உன்னையே சார்ந்திருக்கிறோம். உன்னிடமே திரும்பினோம். மீளுதல் உன்னிடமே உள்ளது’’[119].

‘‘உங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும். உங்களுக்காக என் இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடுவேன். அவன் என்னிடம் அன்புமிக்கவனாக இருக்கிறான் “என்று (இப்ராஹீம்) கூறினார்.’’ [120] அல்லாஹ்வுக்கு இணை கற்பித்த தந்தைக்காக இப்றாஹீம் (அலை) பாவமன்னிப்புக் கோரியதை யாரும் முன் மாதிரியாக எடுத்துக்கொண்டு இணை கற்பிப்போருக்கு பாவமன்னிப்பு கோரக் கூடாது. அதே சமயம் இறைவனுக்கு இணை கற்பித்த தந்தைக்கு இப்றாஹீம் நபியவர்கள் ஸலாம் கூறியதை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்பதை மேற்கண்ட இரண்டு வசனங்களையும் ஒருங்கிணைத்துப் பார்ப்பவர்கள் அறிந்து கொள்ள முடியும். அதுமட்டுமன்றி நபியவர்கள் கடிதங்களை அனுப்புகின்ற போது முதலாவது ஸலாத்தைக் கொண்டு தான் ஆரம்பித்திருக்கின்றார்கள். உதாரணமாக: ஹபஷா மன்னான நஜ்ஜாஷி என்பவருக்கும், ஈலா வாசிகளான அல்அஸ்ஹப் கோத்திரத்தவரருக்கும், உப்பாத் என்பவருக்கும் மற்றும் பஹ்ரைன் பிரதேசத்தை சேர்ந்த ஹிலால் போன்றவர்களுக்கும் அனுப்பியுள்ள கடிதங்களை ஆதாரங்களாக அறிய முடிகிறது.

## முடிவுரை

இஸ்லாம் மனிதர்கள் அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தின் அடிப்படையில் தான் நோக்குகின்றது. மனிதர்கள் அனைவரும் ஒற்றுமையின் அடிப்படையில் உறவுகளை கட்டியெழுப்பத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதுடன் அதற்கான வழி

[119] அல்குர்ஆன் 60:4
[120] அல்குர்ஆன் 19:47

முறைகளையும் ஏற்படுத்தியுள்ளது. ஒருவரை ஒருவர் சந்திக்கும் போதும், உரையாடும் போதும் முகமன் (ஸலாம்) கூறுவதன் அவசியத்தைப் போதிப்பதைக் காணலாம். அந்த நோக்கில் தான் ஹர்பி பிரிவில் அடங்காத முஸ்லிமல்லாதவர்களுக்கும் முஸ்லிம்கள் முகமன் (ஸலாம்) கூறுவதற்கு எந்த தடைகளையும் அல்குர்ஆனோ ஸுன்னாவோ முன்வைத்ததில்லை. ''இறைவன் ஆதம் (அலை) அவர்களைப் படைத்து, அங்கே இருந்த வானவர்(மலக்கு)களிடம் சென்று அவர்களுக்கு ஸலாம் கூறும்படியும், அதற்கு அவர்கள் என்ன பதில் கூறுகின்றார்கள் என்று செவியேற்கும்படியும், அதுதான் உமக்கும் உமது வழித்தோன்றல்களுக்கும், முகமன் (கூறும் முறை) என்றும் சொன்னான். அப்போது ஆதம் (அலை) அவர்கள், அவ்வாறே "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று கூற, வானவர்கள் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி என்று கூறி ரஹ்மதுல்லாஹி என்பதை அதிகப்படுத்திச் சொன்னார்கள்''[121] இதனூடாக அல்குர்ஆன் ஸலாத்தினை மனிதர்கள் அனைவருக்கும் கூறும் படி போதித்துள்ளதை அறிய முடியும். அத்துடன் இந்த முகமன் (ஸலாம்), முஸ்லிம்களிடையே மட்டுமல்ல, முஸ்லிம்கள் அல்லாதவர்களிடமும் சொல்ல வேண்டும் என்பது ''உனக்குத் தெரிந்தவருக்கும் தெரியாதவருக்கும் முகமுன் (ஸலாம்) கூறுவது மிகச் சிறந்த நல்லறமாகும்'' என்கிற நபிமொழியிலிருந்து புலப்படும். எனினும், இது தொடர்பாக சில ஹதீஸ்களை ஆதாரங்காட்டியும் மத்திய கால இமாம்கள் வேறுபட்ட கருத்தினை கொண்டிருந்தாலும். இவை தொடர்பான தெளிவின்மையே அவர்கள் முரண்பட்டுக் கொள்வதற்கான காரணம் எனலாம். ஆனால் அல்குர்ஆனும், ஹதீஸும் ஸலாத்தினை பரப்புமாறு வலியுருத்தி நிற்பதை இவ் ஆய்வின் முடிவில் அறியக்கூடியதாக உள்ளது. இதன் மூலம் முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதவர்களுக்குமிடையிலும் ஸலாத்தினைக் கூறலாம் என்பதுடன் அவர்களுக்கிடையிலான உறவுகளை வளர்த்துக் கொள்ள முடிவதுடன் இஸ்லாம் தொடர்பான சரியான கண்ணோட்டத்தினையும் அறிந்து கொள்ள பங்களிப்புச் செய்யும் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை.

## உசாத்துணைகள்.


Aydin, H. (2008). Islam the religion of peace. The journal of Rotterdam Islamic And social sciences, 2(1), https:DOI:10.2478/jriss-2013-0022

Karim, D. (2011). The greeting of peace- security (al-salamu alaykum). uncovering the basis of Islamic peace. Islam and civilisatioanal journal renewal ICR journal, 3(1),

Maha, T.E. (2019). Islam greeting (of salaam). A religious, historical and sociologistic perspective. IRAQI academic scientific journal, 22(1), 37-54,

Mehdi, M.A.H. (2018). Genealogical analysis of "the royal greeting ceremony" (safe Salam) murals painted by Abdullah khan in negrestan place in Tehran. Honar-Ha-Ye-Tajassomi, 23(1),53-60.


[121] அபூ ஹுரைரா(ரலி), புகாரி, முஸ்லிம்

Nesia, A. (2018). Salam greeting to spread peace in the archipelago of Indonesia. 12(1), 113. https://DOI:10.21043/addin.V12i1.4771

Rahimi, A.W. (2019). The different meaning of salaam in Afghan greeting culture. Research and analysis journal, 2(7), 75-81, retrieved from https://www.rajournals.com/index.php/raj/article.view/43

Steven, C.C. (2009). Salam tahiyah. greeting from the highlands of Yemen.Americaethnologist,13(2),290-308, doi:10.1525\ae.1986.13.2.02 a00060

Maha, T. (2019). Islamic greeting (of salaam) : A Religious, historical and sociologists perspective. Journal of Al qadisiya university, 22(2), 37-54.

Nesia, A. (2018). Salaam greeting to spread peace in the archipelago of Indonesia. ADDIN, 12(1), 113-132.

Abdul Azeez Bin Fouzan Al Fouzan. (2018, July 19). hukmus salaam alal kuffar min ahlil kithab bithahiyyathil islam ßvideoà.YouTube. https://www.youtube.com/watch?v=cdSg1c3mufY

Alhabib Ali Aljifri. (0000, month date). Hivaru Athbail Adhyaan ßvideoà. You Tube. https://www.youtube.com/watch?v=yrgbghnsxws&t=260s

Ibnu Usaimeen. (2017, June 16). Hukmu Budis Salaam Ala Gairil Muslim VaraddisSallamAlaihßvideoà.Youtube.https://Www.Youtube.Com/Watch?V=Wxvo_X0dhsy

Muhammad Alareefy. (2011, December 13). Hukmu Raddis Salaam Ala Gairi Muslim ßvideoà. Youtube. https://Www.Youtube.Com/Watch?V=Awer5ogdn0g

Mehwar TV Channel. (2017, April 13). Halil Islam Yuhrimu Sadaqathal Muslim Val Maseehiy ßvideoà.Youtube. https://Www.Youtube.Com/Watch?V=Pe_B6kbdrzo&T=107s

Musthafa Al Adavi. (2014, April 01). Kaife aruddus salaam ala gairil muslim? ßvideoà. YouTube. https://www.youtube.com/watch?v=JNuXJqigKdA

Saidud Deen Hilali. (2019, January 03). Hal yejoozu ilqaus salaam ala gairil muslim? ßvideoà. You Tube. https://www.youtube.com/watch?v=4wJCPMprO-8

Usman Alkhames. (2019, may 19). ). Hukmus salaam ala gairil muslimeen ßvideoà. You Tube. https://www.youtube.com/watch?v=S2sexaJ4Ef4

Yousuf Qardavi. (2019, December 29). Gairul muslimen fee lillish shareeathil islamiyyah Bvideoà. YouTube. https://www.youtube.com/watch?v=hwDqerZWXhM&t=2920s

இப்னுல் கய்யிம் அல்ஜௌசி, பீ. (1997). அஹ்காமு அஹ்லித் திம்மா: மாதி லின்னஷ்ர். தமாம்.

முஹம்மத் நாசிருத்தீன் அல்பானி, ஹ. (1995). சில்சிலதுல் அஹாதீசிஸ் ஸஹீஹா வஷையுன் மின் பிக்ஹிஹா வபவாஇதிஹா, மக்தபதுல் மஆரிப்: பைரூத் லெபனான்.

முஹம்மத், ஏ.ஆர். (n.d.). தஸ்ஹீலுல் வுசூல் இலா பஹ்மி இல்மில் உசூல். தார் இப்னு கஸீர்: டமஸ்கஸ்.

யூசுப் அப்துல்பிர், அ. (n.d). பஹ்ஜதுல் மஜாலிஸ் வஅன்சுல் முஜாலிஸ்: தாருல் குதுபில் இல்மிய்யா: பைரூத். லெபனான்.